WILD FOREST FOUNDATION
wild-forest.org

பக்கங்கள்: 05

THEEMPUNAL
தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:71 | 16.02.2024 வெள்ளிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2054

# பதவி மோகத்தில் தமிழரசுக் கட்சியை சிதைக்க சதி—சம்பந்தன்



நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சிதைக்கச் சிலர் சதித்திட்டம் தீட்டுகின்றனர், அவர்களின் சதித்திட்டம் வெற்றியளிக்க நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பதவி ஆசையில் அவர்கள் இந்தச் சதி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இது நன்றாகப் புரியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகவும், கட்சியின் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்த பொதுக் குழுக் கூட்டங்களின் முடிவுகளுக்கு எதிராகவும் யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து நேற்று இடைக்காலத் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தனிடம் தமிழ் ஊடகம் ஒன்று வினவியபோது, நீதிமன்றங்களின் இடைக்காலத்தடை உத்தரவுகள் தொடர்பில் தான் இப்போது கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்று கூறியதுடன் மேற்படி விடயங்களையும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளை பொதுச் சபை அங்கீகரிக்காதவிடத்து அல்லது அந்தத் தெரிவுகளில் குழப்பங்கள் நிலவுமிடத்து, தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடத்துங்கள் என்றும், அன்றைய தினமே மாநாட்டையும் நடத்தி முடியுங்கள் என்றும் கடந்த செவ்வாய்க்கிழமை தன்னைச் சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் (இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர்) சம்பந்தன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தவிசாளர் பதவியிலிருந்து சரத்பொன்சேகா நீக்கம்?



ஐக்கியமக்கள் சக்தியின் தவிசாளர் பதவியிலிருந்து முன்னாள் இராணுவதளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத்பொன்சேகா நீக்கப்படவுள்ளதாக அக்கட்சி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து சரத்பொன்சேகாவை வெளியேற்றுவது மிகவிரைவில் இடம்பெறும் என கூறப்படுகின்றது.

அவரை கட்சியிலிருந்து நீக்குவதற்கு கட்சியின் தலைவருக்கு அதற்கான அதிகாரங்கள் உள்ளன.

கட்சி தலைமை எச்சரிக்கை விடுத்துள்ள போதிலும் சரத்பொன்சேகா தொடர்ந்தும் ஐக்கியமக்கள் சக்தியை விமர்சித்து வருவதுடன், சமீபத்தில் அவர் ஜனாதிபதியையும் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னிப்பு கோரிய ஞானசாரதேரர்

முஸ்லிம் மக்களைப் பற்றி சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டமைக்கு அவர்களிடம் இருந்துமன்னிப்புக் கேட்பதாக முஸ்லிம் சமூகத்திடம், பொதுபலசேனாவின் ஞானசாரதேரர் மன்னிப்பு கோரியுள்ளார்.

எட்டுவருடங்களிற்கு முன்னர் தான் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துகள் காரணமாக மனஉளைச்சலை ஏற்படுத்தியிருந்தால் அதற்காக நாட்டின் முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோருகின்றேன் என ஞானசாரதேரர் கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு தகவல் அனுப்பியுள்ளார்.

அதோடு தனது நடவடிக்கைகளிற்காக நாட்டில் உள்ள முஸ்லிம் மக்களிடம் ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

ஞானசாரதேரரின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பிலான விசாரணைகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் மார்ச் 28 ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் திகதி ஆலயத்தில் ஞானசாரதேரர் தெரிவித்த கருத்துகள் இனமத ஐக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என தெரிவித்து சட்டமாஅதிபர் வழக்குத்தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில் இந்திய தூதரக அதிகாரி



இலங்கைக்கான இந்திய தூதுவர் ஸ்ரீசந்தோஷ் ஜா இன்றையதினம் (16) யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்ட அவர் காங்கேசன் துறைமுகத்தினை பார்வையிட்டுள்ளார்.

யாழ்ப்பாண இந்திய துணை தூதரகத்தின் துணை தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் உள்ளிட்ட இந்தியத் துணைத் தூதரகத்தின் குழுவினரும் இணைந்து கொண்டனர்.

# பலாலி ஊடாக இந்தியாவுக்கான மற்றுமொரு தினசரி விமான சேவை



பலாலி விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவுக்கான மற்றுமொரு தினசரி விமான சேவை ஆரம்பிக்கப்பட உள்ளதாக துறைமுகங்கள் கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பலாலி விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவுக்கான மற்றுமொரு தினசரி விமான சேவை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இண்டிகோ விமான சேவை நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகளை இலங்கை அரசு ஆரம்பித்துள்ளது. அத்துடன், மத்தள விமான நிலையம் தொடர்பில் முதலீட்டு விருப்பங்கள் கோரப்பட்டன. அதன்படி, டெண்டர் சபை ஒரு முதலீட்டாளரை தெரிவு செய்துள்ளது.

முதலீட்டாளருடனான பேச்சுவார்த்தைகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளது. அடுத்த வாரம் உடன்பாடு எட்டப்படலாம். அதன் மூலம் அந்த விமான நிலையத்தையும் இலாபமீட்டும் வகையில் மாற்ற முடியும்.

அத்தோடு, இந்த ஒப்பந்தம் ரஷ்ய மற்றும் இந்திய தனியார் கூட்டுத் திட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# 42 பேருக்கு சிவப்பு பிடியாணை

நாட்டை விட்டு தப்பிச் சென்ற இலங்கையர்கள் 42 பேரை கைது செய்ய சிவப்பு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் இந்த 42 பேரையும் இலங்கைக்கு கொண்டு வருவதற்கு நெருக்கமாக செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

துபாயில் நேற்று இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட பலத்த போதைப் பொருள் கடத்தல்காரரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியுமான குடு சலிந்துவின் பிரதான சிஷ்யனான பியூமாவிடம் போதைப் பொருள் கடத்தல் மற்றும் பல ஆபத்தான குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் பதில் பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் உள்ள ஹரக் கட்டாவினை தப்பிச் செல்ல உதவிய தற்போது தலைமறைவாகியுள்ள பொலிஸ் உத்தியோகத்தரும் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி.
பருத்தித்துறை வீதி. நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# மறைக்கப்படும் ஊழல் விபரங்கள்

தனியார்துறை ஊழலுடன் தொடர்புடைய கடுமையான தாக்கங்கள் இருந்தபோதிலும், பொது வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் விரிவான ஊழல் எதிர்ப்பு திட்டங்கள், அவற்றின் பரவலான செயல்பாடுகள் மற்றும் பெருநிறுவன கட்டமைப்புகள் பற்றிய தங்கள் கடமைகள் பற்றிய மிகக் குறைந்த தகவலை வெளியிடுகின்றன. நிறுவனத்தின் செயல்பாடுகளில் தொடர்ந்து ஒளிவு மறைவு என்பது ஊழலை வழக்கமாகக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், செழித்து வளரும் சூழலை உருவாக்குவதற்கு பங்களிக்கிறது. ஊழலுக்கு எதிரான கடப்பாடுகள் மற்றும் கொள்கைகளை வெளிப்படையாக வெளிப்படுத்தத் தவறியதால், நிறுவனங்கள் ஊழலில் ஈடுபடுவது அல்லது ஊழலைக் கண்டும் காணாத நிறுவனங்கள் போன்ற தோற்றத்தை உருவாக்குகிறது. இதனைக் குறிப்பிட்டு, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா (டி.ஐ.எஸ்.எல்) வெளியிட்டுள்ள அறிக்கையில், ஊழல் பெருகிய முறையில் அதிகரித்து வரும் வணிக மற்றும் அரசியல் சூழலில், ஊழலை சகித்துக்கொள்ளாத அணுகுமுறையை கடைப்பிடிப்பது மட்டும் இன்றியமையாதது. ஆனால் ஊழலற்றதாகவும் பார்க்க வேண்டும். 'நிறுவன அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மை 2023: இலங்கையின் சிறந்த 125 பொது வரையறுக்கப்பட்ட நிறுவனங்களை மதிப்பீடு செய்தல்' என்ற தலைப்பில் அறிக்கை இந்த வாரம் கொழும்பில் வெளியிடப்பட்டது.

இந்த மதிப்பீடு இலங்கையில் உள்ள சிறந்த 125 பொது வரையறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கிடையில் கூட்டாண்மை வெளிப்படுத்தல் நடைமுறைகளின் சுயாதீனமான மதிப்பீடாகும். மதிப்பீட்டு முறையானது ஊழலுக்கு எதிரான திட்டங்கள், நிறுவன வெளிப்படைத்தன்மை மற்றும் நாடு வாரியாக அறிக்கையிடல் ஆகிய மூன்று முக்கிய பிரிவுகளை மதிப்பீடு செய்தது. உள்நாட்டு நிறுவன நிலப்பரப்பைக் கருத்தில் கொண்டு, அறிக்கையில் உள்நாட்டு நிதி அறிக்கை, பாலினம் மற்றும் பாகுபாடு இல்லாத கொள்கைகள் பற்றிய அறிக்கை மற்றும் அரசாங்க ஒப்பந்தங்கள் மற்றும் டெண்டர்கள் தொடர்பான கொள்முதல் பற்றிய அறிக்கை ஆகிய மூன்று கூடுதல் பிரிவுகளையும் உள்ளடக்கியிருந்தது.

ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளில் நிறுவனங்கள் சிறந்த முறையில் உருவாக்கி அவற்றைப் பொதுவில் புகாரளிக்க வேண்டும் என்று அறிக்கை பரிந்துரைத்தது, மேலும் மாறிவரும் தரநிலைகளைப் பூர்த்தி செய்ய இந்தக் கொள்கைகளை தொடர்ந்து மதிப்பாய்வு செய்து திருத்த வேண்டும். மேலும் நிறுவனங்கள் தங்களது பாலிசி ஆவணங்களை ஆன்லைனில் வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளது. அத்தகைய ஆவணங்களின் வெளியீடு, நிறுவனம் அதன் பரிவர்த்தனைகளில் வெளிப்படையானது மற்றும் அதன் கொள்கைகளுக்குக் கட்டுப்படத் தயாராக உள்ளது என்ற வலுவான செய்தியை பொதுமக்களுக்கு அனுப்புகிறது, மேலும் கொள்கைகள் வெறும் காகித ஆவணங்கள் அல்ல, ஆனால் வலுவூட்டக்கூடிய உரிமைகள் மற்றும் கடமைகள் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறது.

கட்டுப்படுத்தப்படாத நிறுவனங்களின் சரியான விடாமுயற்சியை மேற்கொள்வது குறித்து, பரிந்துரைகள் பின்வருமாறு: "நிறுவனங்கள் ஊழல் எதிர்ப்பு திட்டங்கள் அல்லது ஊழல் எதிர்ப்பு விதிகளை உள்ளடக்கிய நடத்தை விதிகள், கட்டுப்படுத்தப்படாத நிறுவனங்களுக்கும் பொருந்தும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். நிறுவனங்கள், அத்தகைய நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கும் போது ஒரு சோதனைச் செயல்முறையாக மட்டுமல்லாமல், நிறுவனத்தின் ஊழல் எதிர்ப்புத் திட்டம் அல்லது நடத்தை நெறிமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதை உறுதிசெய்யும் வகையில், நிறுவனங்களின் வழக்கமான கவனத்துடன் இருக்க வேண்டும்.

முதலீட்டாளர்களுக்கான பரிந்துரைகளை முன்வைத்து, நிறுவனங்கள் வலுவான மற்றும் முழுமையான லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான கொள்கைகளை பின்பற்றுவதை உறுதி செய்ய முதலீட்டாளர்களும் பங்குதாரர்களும் தலையிட வேண்டும் என்று அறிக்கை கூறியது. அத்தகைய விதிகள் நடைமுறைக்கு வந்தவுடன், நிறுவனங்கள் தொடர்ந்து விதிகளை கடைப்பிடிப்பதை உறுதிசெய்ய பங்குதாரர்கள் ஒரு கண்காணிப்பாளராக செயல்பட வேண்டும். அத்தகைய கொள்கைகளை நிறுவனத்தின் இணையத்தளங்களில் வெளியிட பங்குதாரர்கள் அழைக்க வேண்டும் என்றும், கொள்கைகளில் ஏதேனும் குறைபாடு இருப்பதாகக் காணப்பட்டால் தேவையான திருத்தங்களைக் கோர வேண்டும் என்றும் அறிக்கை பரிந்துரைத்தது. TISL அறிக்கையின்படி, பங்குதாரர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளைப் பயன்படுத்தி, கொள்கை ஆவணங்களுக்கான அணுகலைக் கோரவும், அத்தகைய ஆவணங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்யவும். நிறுவனங்கள் தானாக முன்வந்து அத்தகைய ஆவணங்களை வெளியிடத் தவறினால், பங்குதாரர்கள் அதை வெளியிடுவதற்கு அழைப்பு விடுக்க வேண்டும், மேலும் அவர்கள் தங்கள் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களுக்கு நிறுவனங்களை பொறுப்பேற்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

# தெற்கு காஸாவின் ஆஸ்பத்திரிக்குள் புகுந்த இஸ்ரேல் இராணுவம்



தெற்கு காஸாவின் பிரதான ஆஸ்பத்திரியான கான் யூனிஸ் நகரில் உள்ள நாசர் ஆஸ்பத்திரியில் நேற்று அதிகாலையில் இஸ்ரேல் இராணுவ வீரர்கள் அதிரடியாக நுழைந்தனர். அப்போது அங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டில் நோயாளி ஒருவர் கொல்லப்பட்டார். 6 பேர் படுகாயமடைந்தனர். முன்னதாக ஆஸ்பத்திரியில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்களும் நோயாளிகளும் வெளியேற தனிப்பாதை ஒன்றை இஸ்ரேல் படைகள் திறந்திருந்தனர். கடந்த சில நாட்களாகவே இந்த ஆஸ்பத்திரி பகுதி நகரின் பிற பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது நேற்று ராக்கெட் வீசப்பட்டது. இதில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்ததற்கு பதிலடியாக இஸ்ரேல் விமானப்படை அங்கு குண்டுமழை பொழிந்தது. இதில் 13 பேர் கொல்லப்பட்டனர். இதில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர். இந்தத் தாக்குதல்களால் இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் மீண்டும் தீவிரமடைந்திருக்கிறது."

# பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதி ஆகிறார் ஆசிப் அலி சர்தாரி?

பாகிஸ்தானில் கடந்த 8 ஆம் திகதி பொது தேர்தலில் எந்தக் கட்சியும் ஆட்சியமைக்காத நிலை காணப்படுகிறது. சிறையில் உள்ள முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான்-தெஹ்ரீக்-இன்சாப் (பி.டி.ஐ.) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்கள் தேர்தலில் அதிக அளவில் வெற்றி பெற்றபோதிலும், அவர்கள் ஆட்சியமைக்க முடியாத சூழலே உள்ளது. இந்த நிலையில், பிற கட்சிகள் கூட்டணி அரசை அமைப்பதற்கான முயற்சிகள் ஒருபுறம் தொடர்ந்து நடந்து வருகின்றன. இதன்படி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சியுடன் கூட்டணி ஏற்படுத்தி கொள்ள, பாகிஸ்தான் மக்கள் கட்சியின் முக்கிய தலைவரான ஆசிப் அலி சர்தாரி ஒப்புதல் அளித்துள்ளார். இதனால், அவர் பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதி ஆவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து உள்ளன.

68 வயதாகும் சர்தாரி, 2008 முதல் 2013 வரையிலான ஆண்டுகளில் ஜனாதிபதியாக பதவியிலிருந்துள்ளார். பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சியைச் சேர்ந்த ஷெபாஸ் ஷெரீப்பை (வயது 72), பிரதமர் வேட்பாளர் என நேற்று முன்தினம் இரவில் அக்கட்சி அறிவித்தது. 3 முறை பிரதமராக இருந்த 74 வயதுடைய நவாஸ் ஷெரீப் 4 ஆவது முறையாக பிரதமராவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த அறிவிப்பு வெளியானது. இதனால், இரு கட்சிகளும், தேர்தலில் வெற்றி பெற்றவர்களின் ஆதரவையும் பெற்று, கூட்டணி அமைத்து பெரும்பான்மையை நிரூபிக்கும் பட்சத்தில், ஷெபாஸ் ஷெரீப் புதிய பிரதமராகவும், சர்தாரி அடுத்த அதிபராகவும் வரக்கூடிய வாய்ப்பு அதிகரித்து காணப்படுகிறது."

# 60 வயதில் காதலியை கரம் பிடிக்கிறார் அவுஸ்திரேலிய பிரதமர்



அவுஸ்திரேலிய பிரதமராக இருப்பவர் அந்தோணி அல்பானீசு. இவரது நீண்டநாள் காதலியான ஜோடி ஹெய்டன் என்பவரை திருமணம் செய்து கொள்ளும் முடிவை அவர் இன்று வெளியிட்டு உள்ளார். அவர்கள் இருவருக்கும் இடையே திருமண நிச்சயம் நடந்துள்ளது. கடந்த 2020 ஆம் ஆண்டு தொடக்கத்தில் மெல்போர்ன் நகரில் நடந்த விருந்து நிகழ்ச்சி ஒன்றில் முதன்முறையாக ஹெய்டனை, அல்பானீசு சந்தித்து பேசினார். இதன் பின்னர், 2022 ஆம் ஆண்டு நடந்த பொது தேர்தலின் போது, பிரச்சாரத்தில் அவருடன் அல்பானீசு ஒன்றாக சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அல்பானீசு பிரதமரான பின்னர் துபாய், மேட்ரிட், பாரீஸ், லண்டன் மற்றும் புதுடெல்லி உள்ளிட்ட நகரங்களுக்கு செல்லும்போது அவருடன் ஒன்றாக ஹெய்டன் சென்றுள்ளார். இங்கிலாந்து நாட்டின் ராணி 2 ஆம் எலிசபெத்தின் மறைவின்போதும், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் அளித்த விருந்து நிகழ்ச்சி உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளிலும் இருவரும் ஒன்றாக பங்கேற்றனர். பதவியில் இருக்கும்போது, திருமண நிச்சயம் நடந்த முதல் பிரதமர் ஆவார் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்காவில் இந்தியர் சுட்டுக்கொலை




அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் உள்ள ஷெப்பீல்ட் பகுதியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரவீன் ராவோஜி பாய் பட்டேல்(வயது 76) என்ற நபர் ஓட்டல் ஒன்றை நடத்தி வந்தார். இவர் சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக ஷெப்பீல்ட் பகுதியில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில் வில்லியம் ஜெரி மூர்(வயது 34) என்ற நபர், தங்குவதற்கு ஒரு அறை தேடி பிரவீன் பட்டேலின் ஓட்டலுக்கு வந்துள்ளார். அப்போது இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அந்த சமயத்தில் வில்லியம் ஜெரி, தன்னிடம் இருந்த துப்பாக்கியை எடுத்து பிரவீன் பட்டேல் மீது இரண்டு முறை சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார். இந்த துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த பிரவீன் பட்டேல், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இது தொடர்பாக விசாரணை நடத்திய ஷெப்பீல்ட் பொலிஸார், குற்றவாளி வில்லியம் ஜெரியை கைது செய்தனர். மேலும் கொலை செய்வதற்காக அவர் பயன்படுத்திய துப்பாக்கியையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

# விவசாயத்துக்கு முன்னுரிமை–ஜனாதிபதி



மஹா கனதராவ குளத்தை நீராதாரமாக கொண்ட அநுராதபுரம் நீர்வேலைத் திட்டத்தை நேற்று (15) மக்கள் பாவனைக்காக கையளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

இதன்போது விவசாயிகள் ஜனாதிபதியிடம் தங்களது பிரச்சினைகளை நேரடியாக கூறியதோடு, அதற்கு ஜனாதிபதி சாதகமாக பதிலளித்தார்.

வேலைத் திட்டத்திற்கான எதிர்ப்பு குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, நீர்த்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதால், எதிர்ப்புக்களை கைவிடுமாறும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சிந்துக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அது தொடர்பிலான மக்களின் யோசனைகளை இரண்டு வாரங்களுக்குள் பெற்றுத்தருமாறும், அவற்றில் சாதகமான விடயங்களை விரைவில் நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி விவசாயத்துக்கு முன்னுரிமை வழங்கப் போவதாகத் தெரிவித்தார்.

## சந்தேக நபர்களுக்கு விஷம் கொடுத்த இருவர் கைது



ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸ் நிலையத்தினுள் சந்தேகநபர்கள் இருவருக்கு விஷ பானம் வழங்கிய சம்பவம் தொடர்புடைய பிரதான சந்தேக நபரும் மற்றுமொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 7 ஆம் திகதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களை பார்வையிட வந்த நபர் ஒருவர் இந்த விஷம் கலந்த பானத்தினை கொடுத்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரும் நேற்று (15) பிற்பகல் வத்தளை, கொட்டாஞ்சேனைஆகிய இடங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் 25 மற்றும் 32 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

## நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்க மஹிந்த ஆதரவு



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது மக்களின் கோரிக்கையும்கூட என்பதை புரிந்துகொள்கிறேன் என்றார்.

"பிரச்சினை இல்லை இல்லாமல் செய்தால் நன்றாக இருக்கும். நான் அனுபவித்து விட்டேன். இன்று நாடே அதை எதிர்க்கிறது தானே."

## முடிவுக்கு வந்தது சுங்கத் திணைக்களத்தின் தொழிற்சங்க நடவடிக்கை

பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுங்கத் திணைக்களத்தின் தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே தொழிற்சங்க நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டதாக சுங்கச் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.




## மக்களுக்கு இலவச LED மின்விளக்குகள்



பொதுமக்களுக்கு இலவச LED விளக்குகளை வழங்குவது குறித்து பரிசீலிக்குமாறு எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக்கான பாராளுமன்றக் குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

மக்களுக்கு இலவச LED மின்விளக்குகளை வழங்கினால், அதற்காக செலவிடப்படும் தொகையை இரண்டு மாதங்களில் அரசு ஈட்ட முடியும் என எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக்கான பாராளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

## மக்களின் ஆர்ப்பாட்டத்தால் தடைப்பட்ட பிரதான வீதி!



வெல்லவாய வெஹெரயாய பகுதியில் நிலவும் யானைகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கோரி வெல்லவாய தனமல்வில பிரதான வீதி வெல்லவாய வெஹெரயாய வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடைபெறுவதால் கொழும்பு - வெல்லவாய பிரதான வீதி முற்றாக தடைப்பட்டுள்ளது.

இதனால் பல கிலோ மீற்றர் தூரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

## Pan Asia வங்கிக்கு மத்திய வங்கி தடை

இலங்கை மத்திய வங்கி பான் ஏசியா வங்கிக்கு முதன்மை வியாபாரியாக செயற்படுவதற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இடைநிறுத்தியுள்ளது.

இதனை Pan Asia வங்கி கொழும்பு பங்கு சந்தைக்கு தெரிவித்துள்ளது.

இந்த இடைநிறுத்தம் பெப்ரவரி 15 முதல் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரிமம் இடைநிறுத்தம் வங்கியின் இயல்பான செயல்பாடுகள் மற்றும் இரண்டாம் நிலை சந்தை பரிவர்த்தனைகளை பாதிக்காது என்றும் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

# கிரிக்கெட்டில் சாதனை படைத்த ஜப்பான்

சீன அணிக்கு எதிரான ரி20 போட்டியில் ஜப்பான் அணி முதல் விக்கெட்டிற்கு 258 ஓட்டங்கள் குவித்து புதிய வரலாறு படைத்துள்ளது. ரி20 கிரிக்கெட்டில் தொடக்க ஜோடி குவித்த அதிக ஓட்டங்கள் இதுவே ஆகும்.

கிழக்கு ஆசிய கிண்ணத் தொடரின் தொடர் ஹாங்காங்கில் உள்ள மோங் கோக் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. 3 ஆவது போட்டியில் சீனா- ஜப்பான் அணிகள் மோதின.

ஜப்பான் முதலில் துடுப்பெடுத்தாடியது. லச்சன் லேக் - கப்டன் கென்டல் ப்ளெமிங் ஜோடி தொடக்க வீரர்களாக களமிறங்கியது. சீன பந்துவீச்சை இவர்கள் இருவரும் துவைத்தனர் என்றே சொல்ல வேண்டும். களமிறங்கியது முதலே பவுண்டரிகளையும் சிக்ஸர்களையும் விளாசிய இவர்களால் அணியின் ஓட்ட எண்ணிக்கை மின்னல் வேகத்தில் சதத்தைக் கடந்தது.

இவர்கள் இருவரும் பவுண்டரிகளையும், சிக்ஸர்களையும் தொடர்ந்து விளாசிக் கொண்டிருந்தனர். அரைசதம் விளாசிய இவர்களது அதிரடியை தடுக்க, சீன கப்டன் வெய் பந்துவீச்சில் மாற்றம் செய்தார். ஆனால், யார் பந்து வீசினாலும் அடிப்பேன் என்ற பாணியில் இருவரும் மிரட்டலான பேட்டிங்கை வெளிப்படுத்தினர்.

அபாரமாக ஆடிய லச்சன் லேக்கும், கப்டன் ப்ளெமிங்கும் சதம் விளாசினர். 20 ஓவர்கள் முடிவில் ஜப்பான் அணி எந்த விக்கெட்டையும் இழக்காமல் 258 ஓட்டங்கள் விளாசியது. சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் தொடக்க ஜோடி எடுத்த அதிகபட்ச ஸ்கோர் இதுவே ஆகும். இதற்கு முன்பு, அயர்லாந்து அணிக்கு எதிராக ஆப்கானிஸ்தானின் தொடக்க வீரர்கள் ஷாசாய் - உஸ்மான்கானி 2019ஆம் ஆண்டு 236 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. அச்சாதனையை ஜப்பான் வீரர்கள் முறியடித்துள்ளனர்.



கடைசி வரை ஆட்டமிழக்காத லச்சன் லேக் 68 பந்துகளில் பவுண்டரி 12 சிக்ஸருடன் 134 ஓட்டங்களும், ப்ளெமிங் 53 பந்துகளில் 3 பவுண்டரி 11 சிக்ஸருடன் 109 ஓட்டங்களும் எடுத்தனர். சீனாவிற்காக 8 பேர் பந்துவீசியிருந்தனர்.

259 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற பிரமாண்ட இலக்குடன் களமிறங்கிய சீனா அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. சீனா 16.5 ஓவர்களில் 78 ஓட்டங்களுக்கு ஆல் அவுட்டானது. அந்த அணியின் கப்டன் வெய் 23 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்தார். சீன அணிக்காக கப்டன் வெய், ஜோவ் குய் மட்டுமே இரட்டை இலக்கரன்கள் எடுத்தனர்.

# டெஸ்ட் போட்டிகளில் அதிவேகமாக 32 சதங்களை அடித்த வில்லியம்ஸன்

நியூஸ்லாந்து வீரர் கேன் வில்லியம்சன் ஹாமில்டனில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் சதம் அடித்த தன் மூலம் அதிவேகமாக 32 டெஸ்ட் சதங்களை எட்டிய வேகப்பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்தார்.

நியூஸிலாந்தின் 267 ஓட்டங்களைத் துரத்துகையில், வில்லியம்சன் 203 பந்துகளில் 11 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் தனது சதத்தை எட்டினார்.




உலகின் நம்பர் வன் டெஸ்ட் வீரர் இப்போது தனது கடைசி ஏழு டெஸ்டில் ஏழு சதங்களைக் குவித்துள்ளார். மவுண்ட் மவுங்கானுயில் நடந்த தொடரின் முதல் டெஸ்டில், 33 வயதான வில்லியம்சன் இரண்டு இன்னிங்ஸ்களிலும் (118, 109) சதம் அடித்தார்.

அவுஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித்தை (174 இன்னிங்ஸ்) பின்னுக்குத் தள்ளிய வில்லியம்சன், 32 டெஸ்ட் சதங்களை மிக விரைவாக எட்டிய வீரர் என்ற சாதனையைப் படைத்தார். ரிக்கி பாண்டிங் (176), சச்சின் டெண்டுல்கர் (179) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

ஒரு டெஸ்ட் போட்டியின் நான்காவது இன்னிங்ஸில் அதிக சதம் அடித்த பாகிஸ்தான் வீரர் யூனிஸ் கானின் எண்ணிக்கையை (ஐந்து) வில்லியம்சன் சமன் செய்தார்.

இந்த இன்னிங்ஸ் தென்னாபிரிக்காவிற்கு எதிராக வில்லியம்சனின் ஆறாவது சதத்தை அடித்து நியூஸிலாந்து-தென்னாபிரிக்கா டெஸ்டில் அதிக சதம் அடித்த 32 டெஸ்ட் சதங்களை மிக வேகமாக எட்டிய வீரர்கள் (இன்னிங்ஸ்)

172 - கேன் வில்லியம்சன்
174 - ஸ்டீவ் ஸ்மித்
176 - ரிக்கி பாண்டிங்
179 - சச்சின் டெண்டுல்கர்
193 - யூனிஸ் கான்

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக நான்காவது இன்னிங்ஸ் சதங்கள்

5 - கேன் வில்லியம்சன்
5 - யூனிஸ் கான்
4 - கிரேம் ஸ்மித், சுனில் கவாஸ்கர், ரிக்கி பாண்டிங், ராம்நரேஷ் சர்வான்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 16.02.2024 அன்று வெளியிடப்பட்டது.